பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 14 வெள்ளிக்கிழமை (31.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 276

# வடக்கில் பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டம் அரசுக்கு இல்லை

## மலேஷியாவில் வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம



கோலாலம்பூர், ஓகஸ்ட் 31

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபுலம் மீது பெரும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் திட்டம் ஏதும் அரசிற்கு இல்லை.

- இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம மலேஷியத் தலைநகர் கோலாம்பூரில் வைத்து இவ்வாறு அறிவித்தார்.

*(08ஆம் பக்கம் பார்க்க)*

## ஊடகவியலாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 31

சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸ்ஒக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புச் செயற்பாடுகளைக் கண்டித்து ஊடகவியலாளர்கள் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.வின் காணாமற்போதல் தடுப்பு சாசனத்தை இலங்கை உறுதிப்படுத்த மன்னிப்புசபை வலியுறுத்து

## மர்மக்கடத்தல் என்ற கோரப்பிசாசு இங்கு மீள் விஜயம் செய்திருப்பதாகவும் வர்ணனை!

லண்டன்,ஓக.31

வல்வந்தமாக ஆள்களைக் கடத்தி காணாமல்போகச் செய்வதற்கு எதிரான , ஐக்கிய நாடுகள்சபையின் காணாமல் போதல் தடுப்பு சாசனத்தை இலங்கைஅரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளது சர்வதேச மன்னிப்புச்சபை. வல்வந்தமான கடத்தலைத் தடுக்கும் ஐ.நாவின் செயலணிக் குழுவை இலங்கைக்கு அழைத்து விசாரணைகளைச் செய்ய அனுமதிப்பதோடு அந்தக்குழுவின் முந்திய சிபார்சுகளை நடைமுறைப்படுத்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை மேலும் வலியுறுத்தியுள்ளது.

காணாமற்போனோர் சர்வதேச தினத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மர்மக்கடத்தல் என்ற கோரப்பிசாசு மீண்டும் இலங்கைக்கு விஜயம் செய்து, அங்குள்ள மக்களை இடைவிடாது சுற்றித் திரிந்து மனப்பிராந்தியை உண்டாக்கி ஏக்கமூட்டுகிறது என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை இன்றைய நிலையை வர் ணித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் வெளியிட்டுள்ள முக்கிய தகவல்கள் வருமாறு:

* ஆண்களும் பெண்களும் அவர்களது வீடுகளில் இருந்து பறித்துச் செல்லப்படுகிறார்கள். இரவில் - இருளில் - மட்டுமன்றி பட்டப் பகலிலும் இழுத்துச் செல்லப்படுகிறார்கள்.
* கடந்த 20 மாதங்களில் வடக்கு - கிழக்கில் நூற்றுக்கணக்கானோர் பாதுகாப்புப் படையினரால் அல்லது ஆயுதக் குழுக்களால் கடத்தப்பட்டிருக்கின்றனர். இந்தக் கொடுமை தலைநகர் கொழும்பு நாட்டின் ஏனைய பகுதி

(08ஆம் பக்கம் பார்க்க)

## குறைந்த அளவிலான அதிகாரங்களை வழங்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது

### ஊடகத்துறை அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 31

''வடக்கு -கிழக்குப் பிரச்சினைக்கு மாகாண சபைகளுக்கு அப்பால் சென்றே தீர்வு காணப்படவேண்டும். மாகாணசபை அதிகாரங்களுக்கு குறைந்தளவிலான அதிகாரங்களுடன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியமற்றது. இந்நிலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தொடரும் மோதல்

கொழும்பு,ஓக.31

முகமாலையில் படையினரின் முன்னரங்க நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே தொடர்ச்சியாக மோதல் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் முன்னரங்க நிலைக்குள் ஊடுருவ முயன்ற விடுதலைப் புலிகள் மீது படையினர் சிறிய ரக

(07ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைப் பிரிக்க பிரிட்டன் சதித்திட்டம் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 31

'இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் தந்திரோபாயம்' என்ற தலைப்பில் பிரிட்டன், புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை இலங்கையில் முன்னெடுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விடாமல் இலங்கை அரசு உடனடியாக அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று அக்கட்சி அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு அவ்வாறு செய்யத் தவறினால் நாட்டு மக்களை ஒன்றுதிரட்டி அம்மக்களின் போராட்டம் மூலம் இவ்வேலைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துவோம் என்றும்

(07ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆயிரம் தொன் கோதுமை மா வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,ஓக.31

திருகோணமலையில் இருந்து 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் கோதுமை மாவுடன் 'ஜால' கப்பல் நேற்று காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்துள்ளது.

கப்பலில் இருந்து கோதுமை மாவை இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கோதுமை மா தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உடன் மக்களுக்கு கோதுமை மா கிடைக்க ஏற்பாடு செய்யப்படுவதாக

(07ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கை மீட்டுவிட்டோம் என்று மகிந்தர் இன்று தம்பட்டம் அடிப்பது பிரபாவின் கண்ணைக் கொண்டுவந்ததாக ஜே.ஆர். கூறியதற்கு ஒப்பாகும்!

### எஸ்.பி. திஸாநாயக்க சொல்லுகிறார்

கொழும்பு, ஓக. 31

கிழக்கை மீட்டுவிட்டோம் என மகிந்தர் இன்று தம்பட்டம் அடிப்பது, வடமராட்சியை மீட்டபோது பிரபாகரனின்கண்ணைக்கொண்டு வந்துவிட்டோம் என்று அன்று ஜே.ஆர். பெருமைப்பட்டமைக்கு ஒப்பானதாகும்.

ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க இப்படிக் கூறியுள்ளார்.

பதுளையில் நேற்று மாலை நடந்த அரசுக்கு எதிரான பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- கிழக்கின் வெற்றியை மஹிந்தர் கொண்டாடுவது இந்த நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்துக்கு அழைத்துச் செல்வதாகவே கருத வேண்டியுள்ளது. நாட்டுமக்கள்இன்று பொருள்களின் விலை ஏற்றத்தாலும், பொருளாதார

(08ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி நோக்கிப் புறப்பட்ட பயணிகள் விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு

### விமானநிலையத்திலேயே தரை இறக்கப்பட்டது

கொழும்பு, ஓக. 31

இரத்மலானையில் இருந்து நேற்று பிற்பகல் 2 மணிக்குப் பலாலி நோக்கிப்புறப்பட்ட பயணிகள் விமானம்ஒன்று ஒரு சில நிமிடங்களில் விமான நிலையத்திலேயே தரையிறக்கப் பட்டது.

குறிப்பிட்ட விமானத்தில் இடதுபக்க இயந்திரம் திடீரெனச் செயலிழந்து புகைகக்கியதை அவதானித்த விமானிகள் எவ்வித பாதிப்பும் இன்றி அதனை தரைஇறக்கினர்.

48 பயணிகளுடன் புறப்பட்ட குறிப்பிட்ட விமானம் தரையில் இருந்து மேல் எழுந்து சுமார் 700 அடி உயரத்தை அடைந்த

(07ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ஐயங்கேணியில் நேற்று நண்பகல் இரு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,ஓக.31

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறா வூர், ஐயங்கேணியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஈ.பி.டி.பி. அமைப்பின் இரு உறுப்பினர்கள் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கண்ணன் என அழைக்கப்படும் சின்னத்தம்பி சீனிவாசன் (வயது31), குட்டி என அழைக்கப்படும் சித்திரவேல் வசந்தன் (வயது29) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

செங்கலடியில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்து இவர்கள் இருவரும் ஐயங்கேணிக்கு தனிப்பட்ட அலுவலாக சென்று கொண்டிருந்தனர் என்றும் அவர்களை வழி

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

கலாபூஷணம் கு.ப.சின்னராசா
அவர்களின் மாணவனான
பாலசிங்கம் விக்னேஸ்வரன் அவர்களின்

## மிருதங்க இசை அரங்கேற்றம்

காலம்: நாளை (01.09.2007) சனிக்கிழமை காலை 9 மணி
இடம்: தென்மராட்சி கலைமன்ற மண்டபம் (சிவன் கோயிலடி, சாவகச்சேரி)

தலைவர்:
திரு. கதிரவேலு கேதீஸ்வரன்
(ஓய்வுபெற்ற திட்டப் பணிப்பாளர் - யாழ்.செயலகம்)



பிரதம விருந்தினர்:
திரு.செ.ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலர், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்கள்:
திருமதி அ.வேதநாயகம்
(வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)



திரு.எஸ்.பாலச்சந்திரன்
(பிரதேசசபைச் செயலர், சாவகச்சேரி)
சங்கீத வித்துவான் திரு.பொன்.ஸ்ரீவாமதேவன்
(இசை ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மதிப்பீட்டுரை:
இசைக்கலைமணி சு.வரதராஜசர்மா (இசை ஆசிரியர்)

அரங்கிசைக் கலைஞர்கள்

| | |
|---|---|
| பாட்டு | வயலின் |
| இசைமாணி, கலைக்குரிசில் தவநாதன் றொபேட் | வித்துவான் அ.ஜெயராமன் |

மிருதங்கம்: கலாவித்தகர் பா.விக்னேஸ்வரன்

| | |
|---|---|
| கடம் | கெஞ்சிரா |
| கலாவித்தகர் நா.மாதவன் | கலாவித்தகர் வீ.ராகவன் |
| முகர்சிங் | தம்புரா |
| கலாவித்தகர் து.சுபேஷ் | க.ரஜீவன் |

கலா ரஸிகப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்துஅரங்கேற்ற நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம் — திரு. திருமதி பாலசிங்கம் குடும்பத்தினர்.






**CB Computer Academy**
Station Road, Kondavil. ☏:-021-4590291

புதிய பிரிவுகள் ஆரம்பம்
01.09.07 (Sat) 05.09.07 (Wed)



கட்டணச் சலுகை பற்றிய விபரங்களுக்கு நேரில்!


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## பொன்னையா இராசரத்தினம்

தோற்றம் 25-06-1924
மறைவு 01-08-2007

கடந்த 01.08.2007 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் பொன்னையா இராசரத்தினம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனை எமது இல்லத்தில் இன்று (31.08.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி அளவில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்குப் பிரார்த்திப்பதுடன், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (64372) - குடும்பத்தினர்.

உ
சிவமயம்
அமரர் கலாநிதி **அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை**
அவர்களின்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவுமலர் வெளியீடும்

காலம் : இன்று(31.08.2007) வெள்ளிக்கிழமை காலை 10 மணி
இடம் : "புவனேஸ்வரி கலையரங்கு", ஞானசம்பந்தர் கலைமன்றம்
தலைவர் : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை B.A. (Hons - Cey.), Ph.D. (Durham)

இந் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (64354)
பா.இரகுவரன்
பொதுச்செயலாளர்.

# மரண அறிவித்தல்

திருமதி
## ஜேம்ஸ் யோண் அருளம்மா

இல.10, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேம்ஸ் ஜோன் அருளம்மா (ஜோணாவாக்) 29.08.2007 அன்று கொழும்பில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் - திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜேம்ஸ் ஜோண் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அல்பிரட் மைக்கல், மேரியான், கற்பேட், றெஜினா வயலற் (குஞ்சு) ஆகியோரின் சகோதரியும் சாந்தி, றஞ்சா, யொய்சி, அன்ரன், கெனமன், கலா, கருணா, சின்னப்பவுண், சூட்டி, மெரினா, பிரபாகரன், சுரேஷ், றமேஷ், சுரேந்தினி, யுனேஸ், றமணி ஆகியோரின் பெரியதாயும் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நேற்று (30.08.2007) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முடிவடைந்து பூதவுடல் ஜெயரட்ண மலர்ச்சாலையிலிருந்து மாதம்பிட்டிய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அல்பிரட் கற்பேட் (சகோதரன்)
T.P. 021 222 3618
இல.21, றக்கா றோட், யாழ்ப்பாணம். (64372)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 - 09 - 1945



மறைவு 11 - 08 - 2006

## அமரர் இரா.பாலச்சந்திரன்
(ஓய்வுபெற்ற உதவிமுகாமையாளர், மக்கள் வங்கி)
திதி: திதியை

*காலமெல்லாம் உம் அருகில் இருப்பேனென்று*
*கனிவுடன் எம்மை அணைத்து வாழ்ந்த உத்தமரே*
*காலன் அழைத்தவுடன் காற்றாய் பறந்து போனீரே*
*எங்கள் துயர் துடைக்க எழுந்தோடி வாரீரோ!.*

37,இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (64353) -குடும்பத்தினர்.

# துயர் பகிர்கின்றோம்

## அருட்பணி வஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் பொனிபஸ்
(பங்குத்தந்தை, மிருசுவில்)



பங்குத்தந்தையாய், பக்கத்துணையாய் அருகிருந்து எம் கல்விச்சாலையின் வளர்ச்சியில் அரும் பணியாற்றிய அருட்பணி B.F. பொணிபஸ் அடிகளாரின் மறைவினால் துயருறும் குடும்ப உறவுகளுக்கும், யாழ்.கத்தோலிக்க திருச்சபைக் கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மிருசுவில் றோ.க.த.க. வித்தியாலயம்,மிருசுவில். (64367)

# துயர் பகிர்கின்றோம்

## அருட் தந்தை B.R.F. பொணிபஸ்



கடந்த இரண்டு வருடங்களாக எமது பங்கில் பணியாற்றிக் கொண்டிருந்த அருட்தந்தை B.R.F. பொணிபஸ் அடிகளார் 27.08.2007 அன்று கொழும்பில் இறைபதமடைந்த செய்திகேட்டு மிகுந்த துயரமடைந்தோம். அடிகளாரது ஆன்மா நித்தியவான் வீட்டில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் வாடும் தாய், சகோதரர்கள் மற்றும் அனைத்து உள்ளங்களின் துயரில் பங்கு மக்களாகிய நாமும் பங்கெடுக்கின்றோம்.

குறிப்பு:- *அருட்தந்தையின் நல்லடக்க நிகழ்வு நாளை (01.09.2007) சனிக்கிழமை கொழும்பில் நடைபெற இருப்பதால் அன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் அன்னாரது ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி இடம்பெறும்.*

**பங்கு மக்கள், புனித காணிக்கை மாதா ஆலயம்,**
தவசிகுளம், மிருசுவில். (64365)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சிவபாதம் (J.P.)
(இளைப்பாறிய அஞ்சல் அதிபர்)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் 104/1. உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வை.சிவபாதம் 29.08.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மயில்வாகனம் - காலஞ்சென்ற பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவானந்த மலரின்(மணி) அன்புக் கணவரும் கௌசல்யா, கணேஸ்குமார், தயாளினி, சசிகலா, கஜேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் நவமணிதேவி, யோகமலர், ஆனந்தாதேவி யோகேஸ்வரன், கணேஸ்வரன் (கல்வியியல் கல்லூரி உத்தியோகஸ்தர், வவுனியா), காலஞ்சென்ற சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-08-2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கஜேந்திரகுமார் (மகன்).
104/1, உக்கிளாங்குளம், வவுனியா.





# பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் காப்புறுதித் துறையில் முன்னணி நிறுவனமும் ஆசியாவிலேயே சமூக சேவைக்கான சர்வதேச விருதில் முதலிடத்தைப் பெற்றதுமான செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்திற்கான பதவி வெற்றிடங்கள்.

**பதவிகள்**

I. Sales Consultant
II. Team Leader
III. Sales Executive

**தகைமை:**
G.C.E. O/L, G.C.E. A/L, அத்துடன் 2007 இல் A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

✱ பதவி 2, 3 இற்கு ஏற்கனவே காப்புறுதித்துறை யில் சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் ஏனையவர்களும் விண்ணப்பிக்கலாம்

**கிடைக்கும் நன்மைகள்**
- கவர்ச்சிகரமான ஊதியம்
- இலவச மருத்துவ வசதி
- வாகன கடன் வசதி
- வீட்டுக்கடன் வசதி
- வெளிநாட்டு சுற்றுலாக்கள் என்பனவும் வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு : *நாளை (01.09.2007) சனிக்கிழமை காலை 9 மணிக்கு*
இடம் : *560, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (செலான் வங்கி 2ஆம் மாடி)*

**முகாமையாளர்.**
தொடர்புகளுக்கு:
**021 222 5061, 077 3726097, 0773276500.**
(64369)


## நல்லூரில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஓக.31

நல்லூர் ஆலய உற்சவ காலத்தின் போது யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியால் வருடாந்தம் நடத்தப்படும் இரத்ததான முகாம் இம்முறையும் நடத்தப்படுகின்றது.

நல்லை ஆதீனத்தின் பிரதான வாயிலுக்கு எதிரே உள்ள வீட்டில் தினமும் மாலை 3.30 மணிமுதல் இந்த இரத்ததான முகாம் நடைபெற்று வருகின்றது.

தேர் மற்றும் தீர்த்தோற்சவ தினங்களில்காலைவேளையிலும் இந்த இரத்ததான முகாம் நடைபெறும் என இரத்த வங்கி அதிகாரி டாக்டர் இ. சிவசங்கர் அறிவித்துள்ளார். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டிப் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ரூ.26 லட்சம்

கரவெட்டி,ஓக.31

கரவெட்டிப் பிரதேச அபிவிருத்திக்கென 26 லட்சத்து 55ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்தே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள சில முக்கிய அபிவிருத்திப் பணிகளும் அவற்றுக்கான ஒதுக்கீடுகளின் விவரமும் வருமாறு -

* கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய கட்டடப் பணிக்கு - ஒரு லட்சம் ரூபா.
* கரவெட்டி திருஇருதயக் கல்லூரி 'பாண்ட்' வாத்தியக் கொள்வனவு - ஒரு லட்சம் ரூபா.
* கீரிப்பளை மயானம் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.
* ஞானாசாரியர் கல்லூரிக்கு போட்டோ கொப்பி இயந்திரம் கொள்வனவு - ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.
* கரவெட்டி பனை - தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் கட்டடப் பணி - ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா.
* கரவெட்டிப் பிரதேச செயலகத் தளபாட மற்றும் உபகரணக் கொள்வனவு - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
* கரவெட்டி கிழக்கு அ.மி.த.க. பாடசாலைக்குத் தொலைபேசி இணைப்பு - ஒரு லட்சம் ரூபா.
* சுடர்ஒளி ச.ச.நிலையக் குடிதண்ணீர்க் கிணறு புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.
* நவிண்டில் கும்பளைவேலி வீதி புன்ரமைப்பு - ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
* யார்க்கரு விநாயகர் ஆலயப் புனரமைப்பு - ஒரு லட்சம் ரூபா.
* கப்பூது பிள்ளையார் கோயில் வீதி புனரமைப்பு - 3 லட்சம் ரூபா.
* நெல்லியடி குழந்தை இயேசு பாலர் பாடசாலைக்கு மண்டபம் அமைத்தல் - ஒரு லட்சம் ரூபா.
* செல்வபுரம் இளங்கோ சனசமூக நிலையத்துக்குப் பொது மண்டபம் அமைத்தல் - இரண்டு லட்சம் ரூபா. (50-70)




'நிக்கொட்' நிதி உதவி திட்டத்தின் கீழ் நவாலியில் புதிதாக அமைக்கப்பட்ட சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்தின் முகப்புத் தோற்றத்தை முதலாவது படத்திலும், இந்த நிலையத்தின் கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் மேலதிக அரச அதிபர் ஆ்.சிவசுவாமி, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கீரிமலை பெரும்பாக அதிகாரி ஆகியோர் நிற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள் : செ.ரமேஸ்)*

## தனிநாயகம் அடிகள் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.31

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகள் இறைபதமடைந்து 27ஆண்டுகள் நிறைவு தின நிகழ்வு நாளை முதலாம் திகதி சனிக்கிழமை யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நினைவு நிகழ்வில் திருப்பலியின் பின்னர் சிறப்புரைகளும் இடம்பெறும். (50)

## கலைப்பீட மாணவருக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை. 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (50)

## பரமானந்தா ஆச்சிரம திருத்தப் பணிகளுக்கு 17 லட்சம் ரூபா நிதியுதவி

கரவெட்டி,ஓக.31

கரவெட்டி பரமானந்தா ஆச்சிரமத்தின் திருத்தப் பணிகளுக்கென 17 லட்சத்து 77 ஆயிரத்து 977 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக நலத்துறைத் திணைக்களம் இந்த நிதியினை வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகம் ஊடாக வழங்கியுள்ளது. (50)

## பரிசாரகர் பயிற்சி நாளை ஆரம்பம்

வடமராட்சி, ஓக.31

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் ஐந்தாவது தொகுதி பரிசாரகர் பயிற்சி நெறி நாளை முதலாம் திகதி சனிக்கிழமை முதல் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ் பிராந்திய சுகாதார சேவையாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் இப்பயிற்சியை ஆரம்பித்து வைப்பார்.

யாழ் குடாநாட்டிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சாதாரண சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகப் பணியாற்றுவோரிலிருந்து தெரிவான 60 பேர் இப்பயிற்சியை பெறவுள்ளனர்.

மூன்றுமாத காலம் இடம்பெறும் இந்த பயிற்சியில் சித்தியடைவோர் அரசினர் வைத்தியசாலைகளில் பரிசாரர்களாக நியமிக்கப்படுவார்கள்.

கடந்த வருடம் மூன்று அணிகள் பரிசாரகர் பயிற்சியை முடித்து அவர்களுக்கான நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. (50-160)

# வனவளத் திணைக்களத்தின் அனுமதி பெறாத மரக்காலைகள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

## வனவள அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

வனவளத் திணைக்களத்தின் அனுமதியின்றி மரக்காலைகள் மற்றும் அரிவுப் பட்டறைகளை நடத்துவது சட்டவிரோதமானதாகும். எனவே, சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் தவறாது உரிய பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று யாழ். வனவளத் திணைக்கள அதிகாரி முருகேசு பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் 300 இற்கும் மேற்பட்ட மரக்காலைகள் இயங்கி வருவது அறியப்பட்டுள்ளது, இவற்றுள் சாவகச்சேரியில் உள்ள மூன்று காலைகளின் உரிமையாயாளர் மட்டுமே உரிய பதிவுகளைச் செய்துள்ளனர்.

இதுவரை பதிவுகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பங்களை அனுப்பிவைக்காதவர்கள் உடனடியாக வனவளத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தவறுமிடத்து இவர்கள் விரைவில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

பதிவை உறுதிப்படுத்தும் உறுதிச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே எழுபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாத மரப்பொருள்கள், விறகு என்பவற்றை மாவட்டத்துக்குள் எடுத்துச் செல்ல முடியும்.

இதேவேளை, காணி உரிமையாளர்களின் அனுமதியின்றி மரங்கள் தறித்துச் செல்லப்படுவதாக முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி மற்றும் மீசாலைப் பகுதிகளில் இந்தச் சட்ட விரோதச் செயல்கள் அதிகரித்துள்ளன- என்றார். (50-88)




## முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு ஐ.நா.தூதரகம் உதவி

நல்லூர்,ஓக.31

சுன்னாகம் கண்ணகி சபாபதிப்பிள்ளை குடியிருப்புகளைச் சேர்ந்த 180 குடும்பங்களுக்கும் பெரிய மதவடி குடியிருப்பிலுள்ள சுமார் 40 குடும்பங்களுக்கும் அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் நுளம்பு வலைகள், விளக்குகள், பிளாஸ்ரிக் பேசின்கள் கொண்ட ஒரு தொகுதி பொருள்களை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கியது. (50-111-77)

## தென்மராட்சியில் மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.31

கலாபூஷணம் சு.ப.சின்னராசாவின் மாணவனும் இணுவில் இளந்தொண்டர் சபை மாணவனுமாகிய பாலசிங்கம் விக்னேஸ்வரனின் மிருதங்க இசை அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி கலை மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். செயலகத்தின் முன்னாள் திட்டப் பணிப்பாளர் கே.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இசைமணி தவநாதன் றொபேட் - பாட்டு, அ.ஜெயராமன் - வயலின், நா.மாதவன் - கடம், வி.ராகவன் - கெஞ்சிரா, து.சுரேஷ் - முகர்சிங், க.ரஜீவன் - தம்ரா ஆகியோர் அரங்கேற்றத்தின் அரங்கிசைக் கலைஞர்களாகப் பங்கேற்பார்கள். (1)

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நெறி 3ஆம் திகதி ஆரம்பம்

வலி.தென்மேற்கு,ஓக.31

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ்.சுகாதார திணைக்கள பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ். சுகாதார பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை கலந்து கொண்டு பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பார்.

இதேவவேளை-

ஏற்கனவே தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து இறுதிப் பரீட்சையில் சித்தி எய்திய பொது சுகாதார பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்களையும் அன்றைய தினம் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை கையளிப்பார் என்று யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (50-135)

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ் மாவட்டத்தில் தற்காலிக இணைப்புப் பெற்ற இணைப்புப் பெறாத முல்லைத்தீவு மாவட்ட இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான ஏப்ரல், மே மாதங்களுக்கான சம்பளம் வழங்கப்படுவதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை முதல் காசோலை மூலம் இந்தச் சம்பளம் வழங்கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார். (50)

# சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபைக்கு ஒரு வருடத்தில் 202 முறைப்பாடுகள்

சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபைக்கு கடந்த ஒரு வருட காலத்தில் 202 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளில் 130 முறைப்பாடுகள் இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் சமாதானமாகத் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் 55 முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் கு.ஜெகநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்பிரதேச பொதுமக்கள் தங்களுக்கிடையில் ஏற்படும் சிறு சிறு பிணக்குகளையும் பிரச்சினைகளையும் ஐந்து ரூபா முத்திரை கட்டணத்துடன் மத்தியஸ்தர் சபைக்கு விண்ணப்பித்துத் தீர்வு காணமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (50-135)

# வளர்ப்பு நாயை அடித்துக் கொன்றமைக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.31

வளர்ப்பு நாயை அடித்துக் கொன்றவருக்கு எதிராக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பகுதியில் 10 வயதுச் சிறுவன் ஒருவனை அப்பகுதியில் உள்ள வீடொன்றில் நின்ற வளர்ப்பு நாய் கடித்துக் குதறியுள்ளது. இதனால் ஆத்திரமுற்ற சிறுவனின் தந்தையும் உறவினர் ஒருவரும் அந்த நாயை அடித்துக் கொன்றனர்.

இதனையடுத்து அந்த நாயை வளர்த்து வந்தவர் நாயைக் கொன்றதற்கு எதிராக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்தார்.

இதனையடுத்து பொலீஸார் மல்லாகம் நீதிமன்றில் மிருகவதைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது. இரு பகுதியினரதும் சட்டத்தரணிகள் வழக்கைச் சமாதான முறையில் தீர்த்து வைக்குமாறு மன்றில் தெரிவித்ததையடுத்து இருபகுதியினரையும் எச்சரித்த நீதிவான் சமாதானமாகச் செல்ல அனுமதித்தார். (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைக்கிள் உரிமம்பெற மக்கள் முண்டியடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.மாவட்ட உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களில் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் பெறுவதற்கு மக்கள் முண்டியடிப்பதைக் காணமுடிகிறது.

சைக்கிள்களுக்கு இவ்வருடத்திற்குரிய இலக்கத் தகடுகள் பொருத்தப்பட வேண்டுமென அண்மையில் படையினர் அறிவித்ததையடுத்து இலக்கத் தகடுகள் பெறுவதில் மக்கள் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

உள்ளூராட்சி அலுவலகங்கள் சிலவற்றில் மக்கள் வரிசையில் நின்று இலக்கத் தகடுகள் பெறுவதைக் காணமுடிகிறது. (50-207)


## "துளிர்கள்" நிறுவனத்தின் உள சமூக கற்கை நெறி

- சான்றிதழ் பயிற்சிப் பிரிவு - 04
- பயிற்சிக் காலம் - ஆறு மாதங்கள்.
- தகைமைகள் - G.C.E.O/L, சமூக சேவையில் ஈடுபாடு.
- விரிவுரைகள் - சனி, ஞாயிறு நடைபெறும்.

ஆர்வமுள்ள இருபாலாரும் 10.09.2007 முன்பு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

- குறிப்பு :-

ஆசிரிய மாணவர்கள், அரசஉத்தியோகத்தர்களுக்காகவே சனி, ஞாயிறு விரிவுரைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இல.47, மாட்டின் லேன்
யாழ்ப்பாணம்.
(64308)
இயக்குநர்,
துளிர்கள்.


விராட் விஸ்வப்பிரமனேய நம

## சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 20 ★ 11 ★ 1920



மறைவு 06 ★ 08 ★ 2007

வர்ததலைவ்ளான, மதலபபழை
"சிற்பக்கலாமாமணி"

### அமரர் சின்னையா செல்லத்துரை

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப வல்லுனர், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை)

06.08.2007 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (01.09.2007) சனிக்கிழமை பகல் அமரரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
*40/2, கலைமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
குடும்பத்தினர்.
(சி/55509)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை மார்க்கண்டு (J.P)



*(ஓய்வுபெற்ற கிராம சேவையாளரும், கைதடி வைரவர் கோயில் தர்மகர்த்தாவும்)*

கைதடியைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வே.மார்க்கண்டு அவர்கள் 26.08.2007 ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புதல்வரும் கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற புசல்லாவ கந்தையா- பறுவதம் தம்பதியரின் அன்புமருமகனும் கண்மணியின் அன்புக் கணவரும் மகேஷ்வரன் (ஜேர்மனி), கனடாவைச் சேர்ந்தவர்களான சபேஸ்வரன், சுதேஸ்வரன், இரவீஸ்வரன், மகிந்தினி, இலண்டனைச் சேர்ந்த சுகிந்தினி, இரவிந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகாதேவன், சண்முகதாஸ், சிவசுதன், சூரியகலா, நிகிலா, தமயந்தி, கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனும் கார்த்திகேசு J.P. (கந்தையா அன்சன்ஸ், புசல்லாவை), கதிர்காமசுவாமி (கனிபோடெக்ஸ், கொழும்பு), கனகமணி (கண்டி), தம்பிமுத்து (கைதடி), சிவமணி (இலண் டன்) ஆகியோரின் மைத்துனரும் தில்லைப்பிள்ளை (கைதடி), தவநாதன்J.P, (நியூகருணாநிதி ஸ்டோர்ஸ், கண்டி), மனோகரி, திலகவதி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரரும் ரஜீஷன் (கனடா), காண்டீபன் (இலண்டன்), பார்த்தீபன் (மலேசியா) ஆகியோரின் பெரியப்பாவும் கவிதா(கனடா), காயத்திரி, தர்ஷன், தர்ஷிகா, தீர்த்திகா ஆகியோரின் பெரியமாமனாரும் மாசுதன், மயூரா, மிருலன், மயூரன், மாகீசன், மதுசன், சர்விகா, சஞ்சயன், சுயிதன், சுயிதினி, தனுகினி, மைக்கீரன், ரஸ்மியா, கார்த்திக், மிதுனன், சஜீவ், வைஸ்ணவி, சங்கவி, அர்ச்சனா, பவனீதன், தனுஜன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 01.09.2007 சனிக்கிழமை இலண்டன் மனோபார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*

சண்முகதாஸ் *(மருமகன்)*,
சிவசுதன் *(மருமகன்)*.
MANOPARK
CREMATORIUM
CITY OF LONDON
TEL : 00442085488219

கந்தையா கார்த்திகேசு (J.P)
*[மைத்துனர்]*
*இல: 381, நுவரெலிய வீதி,*
*புசல்லாவை.*
TEL : 0812478213
க.கதிர்காமசாமி *(கொழும்பு).*
TEL : 0112588938
தவநாதன் (J.P)
*நியூகருணாநிதி ஸ்டோர்ஸ் (கண்டி)*
TEL : 0812225647

(64346)

உ
சிவமயம்

### "அறப்பணி அரசு எங்கள் தவத்திரு சு.மோகனதாஸ் சுவாமிகளின் 58 ஆவது ஜனனதின வாழ்த்து 31.08.2007




அன்னதானக்கந்தன் எங்கள் அழகன் முருகனுக்கு அழகுசேர்க்கும் உலகப் புகழ் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளிற்கு எங்கள் இதயத்து நல்வாழ்த்துக்கள்.

கவிமணி அன்னைதாஸன்
உரும்பிராய்.
சிவ.ஆறுமுகசாமி J.P
குடும்பத்தினர்- கொக்குவில்.
க.கனகராசா J.P நல்லூர்.
(64340)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08.10.1951

இறப்பு
10.09.2006



அமரர்
### இராமலிங்கம் பஞ்சாட்சரம்

எம்மோடு இனியவராய்
வாழ்ந்து நல்வழி காட்டியவரே!

சுகாதாரப்பகுதி நலன்புரிச் சங்கம்,
யாழ்.மாநகர சபை.
(64352)


இரசாயனவியல் வகுப்பு
Chemistry
Personal Class
(2008/2009 Batch)
அலகுரீதியாகக்
கற்பிக்கப்படும்
ஆசிரியர் [யாழ்/
இந்துக்கல்லூரி]
தொடர்பு:பராபரன்
(B.Sc.,M.Sc
(Chemistry)
T.P.:0776006579


## பெரும்பாக உத்தியோகத்தர் நியமனம்

சண்டிலிப்பாய் கமநலசேவைநிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தராக வை.பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இந்த நியமனத்தைச் செய்துள்ளார். (50-135-95)

## நவாலி ம.வி.இற்கு புதிய அதிபர்

நவாலி மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக இராசேந்திரம் வசந்தகுமார் நியமனம் பெற்றுள்ளார்.

சிரேஷ்ட ஆசிரியராக, உப அதிபராக மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பணியாற்றிய இ. வசந்தகுமார் நவாலி மகாவித்தியாலய அதிபராக அண்மையில் நியமனம் பெற்றார். (50-95)


WESTERN UNION ® வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் பணப் பரிமாற்றம் ®

WESTERN UNION மூலம் பணம் அனுப்பி
பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN - 10 இலக்கங்கள்)
கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில்
உங்கள் கைகளில் பணத்துடன் .
பரிசில்களையும் பெற்றுக் கொள்ள

SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303, K.K.S.ROAD,
JAFFNA.
(C/53251)
T.P.: 021- 222 2670, 5392
Fax: 021- 2223214
e.Mail: srimurugan @ eureka.lk


## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அன்னை மடியில் 28 ⚓ 02 ⚓ 1977



அகிலாய அழிப்பில் 03 ⚓ 06 ⚓ 2007

அமரர்
### சுப்பிரமணியம் சாந்தீபன்
(உபதபாலதிபர், மிருசுவில்)

திதி:- திருதியை 31.08.2007

அரவணைத்த குலவிளக்கு அணைந்து விட்டது.
தலை நிமிர்ந்து நேர்மையுடன் நீ நடந்த தடங்கள்
அழிந்து விட்டது.
காதலித்து கைப்பிடித்த மனையாள் கதறிட
கண்மணி போன்ற இரு மழலைகள் உன்னைத் தேட
கண்ணில் காணாது உன் பெற்றோர் ஏங்கி தவிக்க
கடிதென வந்த கொடியோர் - எம்
கண்மணி உன் சாந்தீபத்தை அணைத்தனரோ
நித்தமும் உன் நினைவோடு எமக்கு போராட்டம்
கிடைக்குமா இனி உன் முக தரிசனம்.
எப்போதும் உன் ஆத்மா இறைவன் கழலிருக்க
தினம் ஆராதிக்கின்றோம் உனக்காக நாம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

உன்நினைவில் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

## கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலிக்கின்றோம்



### அருட்தந்தை B.F.பொணிபஸ்

*எம் பங்கின் உயர்ச்சிக்காய்*
*பணியாற்றிய இறைபணியாளனே!*
*எம் ஆலயம் புதுப் பொலிவடைய*
*உழைத்திட்ட அருளாளனே!*
*பிணி நீக்கி குணமளித்த*
*இறைவனின் ஊழியனே*
*எமைப் பிரிந்து சென்றனையோ!*
*உள்ளம் கலங்குகின்றோம்.*

*காற்றினிலே வந்த செய்தி*
*கனவாக செவியிறங்க*
*தவிதவித்துப் போனோமே...*
*பொய்யாகக் கூடாதா...*
*பொருமுதே எம் நெஞ்சம்*
*உங்களால் நாமடைந்த*
*உடல் உள ஆன்மிக*
*நலன்களுக்கு நன்றி ஐயா!*

*நின் ஆன்மா சாந்தியுற*
*நிமலன் பதம் அமைதிபெற*
*கண்ணீர்ப் பூக்களால்*
*இறைவனை அஞ்சலிக்கின்றோம் யாம்*

இளவாலைப் பங்கின் பங்குத் தந்தையாக, இளவாலை மறைக்கோட்ட முதல்வராக அரும்பணியாற்றி அருளாளன் பதமடைந்த அருட்பணியாளர் B.F.பொணிபஸ் அடிகளாருக்கு எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் அன்புத் தாய், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள், குருக்கள், துறவிகள் அனைவருக்கும் எம் அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களின் மன அமைதிக்காகவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இளவாலை அன்னாள் ஆலய
பங்குத் தந்தையும் மக்களும்.
(64336)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.31

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக நிகழ்வில் 14ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை 'நாவலர்மரபு' என்னும் தலைபபில் இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் சொற்பொழிவாற்றுவார்.

பெரியவிழான் வடசேரிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சங்கானை மாவடி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

(203-79-111)

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களம் நல்லைக் கந்தன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்திவரும் ஆன்மீக சிந்தனையுடன் கூடிய கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சகிதம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ குரு சிவஸ்ரீ ச.யோகேஸ்வரக் குருக்கள் தீபாராதனை செய்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: அபிரதன்)




# VACANCY

**Post: Site Manager - Samuthana**

Applications are invited from candidates who possess the required qualifications to hold the position of Site Manager at Samuthana, an organisation which is involved in developing Mental Health related activities by creating a resource centre to build capacity of those interested by conducting workshops, training programmes and seminars, in collaboration with Shanthiham - in Jaffna District

**Salary: Negotiable**

**Duration - Initially for one year on contract basis with possible extension**

**Duties will include:-**

*Developing links with statutory and non governmental workers in the mental health field working in Jaffna District
*Establishing training needs.
*Liaising with resource persons and coordinating training activities.
*Developing the Resource Centre and maintaining the office base.
*Maintaining of complete and proper accounts and records.
*Organize/facilitate workshops, seminars and trainings on a regular basis at the designated site and subsequent supervision of same.
*Forward a monthly report of all activities of the Site Office to Head Office through the Centre Manager.
*The selected candidate will be working directly under the Centre Manager and function as per his/her instructions/ advises

**Educational qualification:** Degree from a recognized University in psychology or Anthropology or sociology as main subject.

**Experience:** Preferably one year working experience in an NGO setting and in a senior capacity. Should have knowledge in Mental Health/ Psychosocial related activities

**Skills:**

Able to communicate & co-ordinate with other organizations and Govt. Departments, Organize, & Maintain Office base in Jaffna.
Ability to organize/ Facilitate Trainings, work shops & seminars related to Mental Health.
Computer literacy is important. .Should be able to work independently in computer, Email & internet knowledge would be an added qualification
Excellent interpersonal and communication skills

**Accounts:** Should have a basic knowledge in accounts
**Age:** Preferably between 25 - 30 years of age
**Language Skill:** Thorough Working knowledge in English and Tamil
Ability to draft reports clearly and concisely

Only short listed candidates would be called for Interview.
C.V. should include two non related referees and contact numbers of the candidates, if any.
Applications closing date 05.09.2007

**To be forwarded to**
**S. Y .Sankara pillai**
**Executive Director Shanthiham**
**8/1 Katpaha Vinayagar Lane**
**Off Kachcheri Nallur Road**
**Jaffna.**

(C/53511)


## உங்களுக்கு சக்தி தரவல்ல ஓம் நமச்சிவாய மந்திரம்

அலைபாயும் மனதை அடக்கி, ஓர் எல்லைக்குள் வைக்க மந்திரங்களைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது பயன்படுகிறது. மந்திரத்தின் உள்ளடங்கிய சக்தியும் நமது உள் மனத்தைக் கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக, 'அப்பிள் பழம்' என்ற சொற்றொடரையே நீங்கள் திரும்பத் திரும்ப மந்திரமாக உச்சரிப்பதாக வைத் துக்கொள்ளுங்கள். என்ன ஆகும்? அப்பிள் பழத்தின் உருவம் உங்கள் கண்ணின் முன்வந்து நின்று கொண்டிருக்கும்.

'முட்டாள்' என்ற சொல்லைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். என்ன நடக்கும்? யார் மீது இதை உபயோகித்தாலும் எதிர்மறைச் சக்தியுள்ள சொல்லைக் கூறும்போது, மனக் கலக்கம் தான் ஏற்படும். 'ஓம் நமச்சிவாய' என்ற மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்துப் பாருங்கள்.

இது ஆக்க சக்தியை உண்டு பண்ணக் கூடியது. சொல்லச் சொல்ல ஒரு மகா சக்தியுடன் நீங்கள் ஒன்றுபடும் உணர்வு உங்களுக்கு ஏற்படும். அது மெல்ல மெல்ல உங்களுக்கு ஒரு சக்தியை உங்களுக்குள் தூண்டிவிடும். இப்படி உங்களுக்குள்ளேயே ஒரு புதுப் பலம் மலர்ச்சி பெற்றவுடன்,

ஞானக்கதிர்

அது உங்களிடமே தங்கிவிடும். உங்களை விட்டு அது நீங்குவதில்லை. 'துணிச்சலையும் தன்னம்பிக்கையையும் ஊட்டும் எண்ணங்களை மீண்டும் மீண்டும் வரவழைத்துக்கொள்ள வேண்டும்.' என்று மனோத்துவ நிபுணர்கள் சொல்லுவதும் இந்த அடிப்படையில்தான்.

- சுவாமி முக்தானந்தா.

## நடனநாடகப் போட்டி

யாழ். கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காவிய கதா நடன நாடகப் போட்டி நாளை மறுதினம் இரண்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அன்று காலை 8.30 மணிக்கு ஏற்கனவே திட்டமிட்டபடி போட்டிகள் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (50)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவீ! பணிவோர் - நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தெரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார்.

- யோகர் சுவாமிகள்

### பாடி வழிபட அருள் தாராய்!

(பாதி மதிநதி என்ற திருப்புகழ் மெட்டு)

*சீத நறுநதி பாதி மதியிவை*
*சேர அணிசிவன் தருபாலா*
*தேசு மிகவுயர் ஆறு முகமுடை*
*தீர னெனவளர் குமரேசா*
*மாத ரீருவரோ டாடி அதிவிரை*
*வாக மயில்மிசை வருவோனே*
*வாடி யடியவர் நாடி வரஅவர்*
*மாய வினைகளைந் தருள்வோனே*
*பாத மிசைமலர் தூவி அனுதினம்*
*பாடி வழிபட அருள்தாராய்*
*பாரி லமைதியும் போரில் நிலைமையும்*
*பாச முடனருள் படைவீரா*
*ஓாத தொலைமணி நாத மெழ,அழ*
*கான நலைநகர் உறைவோனே*
*காண அழகிய கோயி லொடுபெருங்*
*காவுமுறுபதிப் பெருமாளே!*

- துனக்கினப்பூர் வ.சின்னப்பா.

### சித்தம் இன்னும் இரங்காத தேனோ?

எத்தனை ஆண்டுகள் எத்தனை வேண்டுதல்
இன்னும் நீதான் இரங்காத தேனோ
பக்தர்கள் அழுது சிந்தும் கண்ணீர்
பார்வைக் குத்தெரி யவில்லைத் தானோ
சித்தர்க் கருளிய சிங்கா ரவேலா
சித்தம் இன்னும் இரங்கா ததேனோ
இத்தனை இன்னல் பட்டுச் சலிக்கும்
எமக்குத் தீர்வு நீதா ராயோ!

- வ.யோகானந்தசிவம்.


புதியBatch ற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன

O/L தகைமையுடன் நீங்களும் கணினிப் பட்டதாரியாகலாம்
இரண்டு வருடங்களில்

Degree Certificates awarded by
Trinity University(USA Spain)
OR
Institution of British Engineers (UK)

3வது வருடத்தில் எமது சான்றிதழுடன் காமராஜர் பல்கலைக்கழகத்தின் Post Graduate Dip வைப் பயிலமுடியும்
சர்வதேச அங்கீகாரமுடைய மூன்று பல்கலைக்கழகங்களுடன் எம்முடாக இணையும் அரிய வாய்ப்பு

அலுவலர்களுக்காக சனி. ஞாயிற்றுக் கிழமைகளில் தனியானபிரிவு

இரண்டு வருடங்களில் எமது மண்ணிலேயே ஆங்கில மூலமான முதலாவது Degree

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் Higher Diploma கற்கைநெறியை தொடர்ந்து பயில முடியாதவர்கள் எம்முடன் இணைந்து B. Sc. யை பயில முடியும்.

A/L மாணவர்களுக்கான Diploma வகுப்புக்கள் ஆரம்பம்
MS Office Software Eng. DTP Hardware Eng. Internet & e-mail
All Diploma Certificates are awarded by Trinity University

தொடர்புகளுக்கு

Prof. A. Sanmugadas,
Administrative Advisor.

NORTH LANKA I I T
The Srilankan Center of Trinity University USA
Main Street, Chankanai.
060 2214305 Hotline:- 0773583616

NEW COLLEGE OF HIGHER STUDIES
No 95, Ariyakulam Junction, Jaffna.
060 2214305

கணினிப் பாரம்பரியத்தில் பத்து வருட தன்னிறைவுடைய நிறுவனம்





நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
இன்று பதின்நான்காம் திருவிழா
நல்லூர்க் கந்தனே! அழகா!
உன் அருளைத் தருவாயப்பா!
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
செல்வா எலக்ரிக்கல்ஸ்
இல. 43/1, பலாலி வீதி, திருநெல்வேலி.
தொ.பே.: 021 4590524


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை வைத்தியசாலையில் காசநோய் சிகிச்சைப் பிரிவு

வடமராட்சி, ஒக.31

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் காச நோய் சிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி மாதந்தோறும் நான்காவது வெள்ளிக்கிழமை இச்சி கிச்சைப் பிரிவு இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிப்பதுடன் தேவையான மருந்து வகைகளும் வழங்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-160)

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் வரிசையில் வடமராட்சியில் அருள் பாலிக்கும் ஐந்தாவது ஈஸ்வரம்

### ஸ்ரீ ஜெகதீஸ்வரம்

அன்புடையீர்!

கற்பகாம்பாள் சமேத மூத்தசிவன் ஸ்ரீ ஜெகதீஸ்வர நாதர் தேவஸ்தான திருப்பணி நிதிக்கான

**மாபெரும் உலக சாதனை**

தொடர்ச்சியாக 09 மணித்தியாலம் பேசுதல்

விடயம் - மகாபாரதம்

நிகழ்த்துபவர் - சித்தாந்த சாகரம்

சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர்

(முதல்வர், இந்து மறுமலர்ச்சி ஆதீனம்)

காலம்: நாளை (01.09.2007) சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

இடம்: ஸ்ரீ ஜெகதீஸ்வரம் கோயில் தோட்டம், அல்வாய்.

இந்துப் பெருமக்களே!


வடமராட்சியிலுள்ள ஸ்ரீ ஜெகதீஸ்வரம் தேவஸ்தான திருப்பணி நிதிக்கு பாரி வள்ளலென வாரி வழங்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

கோயில் தோட்டம்,
அல்வாய்.

தேவஸ்தான நிர்வாகிகள்:
சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் வம்சவழியினர்,
திருமதி செ.செல்லம்மா வம்சவழியினர்.

(64322)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சுப்பிரமணியம் சாந்தீபன்**

*(உபதபாலதிபர், மிருசுவில்)*

03.06.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது சங்க அங்கத்தவர் அமரர் சுப்பிரமணியம் சாந்தீபன் (உபதபாலதிபர், மிருசுவில்) அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காங்கேசன்துறை.

தகவல்:
உபதபாலதிபர்கள்தொழிற்சங்கம்
யாழ்கிளை.

(64226)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
30-03-1937

உதிர்வு
01-08-2007

**அமரர் ஆறுமுகம் தியாகராஜன்**

*(ஒய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)*

பருத்தித்துறை காணிப்பதிவக காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளருமான

திருமதி **தியாகராஜன் சரஸ்வதி**

அவர்களின்அன்புக் கணவர் ஆறுமுகம் தியாகராஜன்அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி விவாக, பிறப்பு,
இறப்பு பதிவாளர்கள்.

(64246)

## இந்து தர்மாசிரியர்களுக்கு நாளை கருத்தரங்கு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து தர்மாசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்ட இணைப்பாளர் க.தேவேந்திரன் தலைமையில் நடைபெறும் மேற்படி பயிற்சிக் கருத்தரங்கில் சைவப்புலவர் கந்த.சத்தியதாசன், பாலசண்முகம், கோப்பாய் சிவம், ஜெயக்குமார், செல்வ மனோகரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

கருத்துரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். பங்குபற்றும் ஆசிரியர்கள் காலை 8 மணிக்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப் படுகின்றனர். (79-111)

## வட்டுக்கோட்டையில் கோழிகளுக்கு நோய்த்தடுப்பு

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் காலையில் கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கு கம்போறா மற்றும் ரணிகற் நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாக வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் த.பிரபாகரன் தெரிவித்தார்.

இதேவேளை - இப்பணிமனையில் ஆடு, மாடுகளுக்கு செயற்கைமுறையில் சினைப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமது கால்நடைகளுக்கு சினைப்படுத்தலை மேற்கொள்ள விரும்புபவர்கள் பணிமனைக்கு வந்து பெயரை பதிவு செய்து சினைப்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (50-135)

## தேக்கு மரங்களின் விற்பனை கூறுவிலை கோரல்

நன்கு முற்றிய தேக்குமரங்கள் விற்பனைக்கு உள்ளன. இது தொடர்பாக பாவனையாளரிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. இம்மரங்களை 108, பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள வெண்புறா நிறுவன வளவில் கிழமை நாள்களில் காலை 10 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை பார்வையிடலாம். கூறுவிலைகள் யாவும் 14.09.2007 நண்பகல் 12 மணிக்குமுன் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தபால் மூலமோ நேரடியாக்வோ கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும்.

**Dr.DAN Muthuveloe**
103, Palaly Road.
Thirunelvely.

(64334)

## கோழிக்குஞ்சு விற்பனை

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட சிவப்பு, வெள்ளை போடுக்குஞ்சு ?ட் ள் விற்பனைக்குண்டு. அத்துடன் புறொயிலர் குஞ்சு 01-09-2007 பெற்றுக்கொள்ளலாம். முற்பதிவு செய்யவும். நல்லூர் பாம், 19,முருகேசர் லேன், நல்லூர். T.P.|6944.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

அரசடி, தொண்டைமானாறில் வசிக்கும்

**திரவியதாசன் - இராசமலர்**

தம்பதியினரின் செல்வப்புதல்வி

**அபிராமி**





தனது முதலாவது பிறந்த நாளை இன்று 31.08.2007 வெள்ளிக்கிழமை அரசடி, தொண்டைமானாறில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா ராஜ்குமார், அக்கா சங்கீதா, அண்ணா கிருஷ்ணகுமார், அக்கா கிருஸ்ணகுமாரி மலேசியாவில் வசிக்கும் நந்தன்மாமா,மாமி, அரசடியில் வசிக்கும் அம்மம்மா ராஜராஜேஸ்வரி, அப்பம்மா இராசலட்சுமி, அப்பப்பா தங்கவடிவேல் மற்றும் வவுனியாவில் வசிக்கும் பெரியப்பா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அம்பாள் வெதுப்பக சமூகத்தினர் அனைவரும் செல்வச்சந்நிதி முருகன் துணையுடன் பல்கலையும் பெற்று சீரும்சிறப்புடனும் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
திரவியதாசன் -அப்பா,
இராசமலர் (குயில்)- அம்மா,
அரசடி,
தொண்டைமானாறு.

(64099)

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமியம்மா இலங்கைவினாயகம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இலட்சுமியம்மா இலங்கைவினாயகம் (29.08.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விதானையார் ஞானப்பிரகாசம்- கதிராச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருணாசலம்- சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற இலங்கை வினாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரையின் சகோதரியும் பாலசிங்கம் (ஆஸ்திரேலியா), இராசேஸ்வரி, யோகேஸ்வரி, மங்களேஸ்வரி (ஜேர்மனி), ஜெகசோதி (ஜேர்மனி), சந்திரசோதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் காந்திநாயகி (ஆஸ்திரேலியா), இரத்தினசபாபதி, முத்துலிங்கம், பாக்கியநாதன் (ஜேர்மனி),நவநீதராசா (ஜேர்மனி), தங்கராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் இதயனி (ஆசிரியை, யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), சுயித்திரா (ஜேர்மனி), சுலபிகா, அனுசாக ரன் (ஆஸ்திரேலியா), றூபனா (ஆஸ்திரேலியா), சாருகா (ஜேர்மனி), லயூகரன் (ஜேர்மனி), ஜென்சிகா (ஜேர்மனி),பாபுஜி (ஆஸ்திரே லியா), ஜெயந்தா (ஆஸ்திரேலியா), ஆரணன் (ஆஸ்திரேலியா), விக்கினேஸ்வரன் (ஆசிரியர்), தர்மசீலன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமார் (உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் பேர்த்தியும் அபிஷாத், பாணுகா (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் வைத்திலிங்கம் (எஸ்), காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
இரத்தினசபாபதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி

(64343)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
30 . 11 . 1949



உதிர்வு
01 . 08 . 2007

**திருமதி வீரசிங்கம் பூமலர்**

*"நெஞ்சிருக்கும் வரையில் உங்கள் நினைவிருக்கும்"*

எங்கள் ஆருயிர் குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (31.08.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

555, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(64333) (இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரங்கேறும் அராஜகங்கள் குறித்து புள்ளிவிவரங்கள் தரும் அதிர்ச்சி

காணாமற்போனோருக்கான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதையொட்டி - இலங்கை தொடர்பாக - வெளியான புள்ளி விவரங்கள் அதிர்ச்சி தருபவையாக அமைந்துள்ளன.

சட்ட, சமூக மையம், மக்கள் கண்காணிப்புக்குழு, சுதந்திர ஊடக இயக்கம் ஆகியன இந்தப் புள்ளிவிவரங்களைத் திரட்டி வெளியிட்டிருக்கின்றன.

அதன்படி -

இலங்கையில் இந்த வருடத்தில் 547 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். 396 பேர் காணாமற்போயிருக்கின்றார்கள்.

நாட்டில் 16 வீதமானோர் தமிழர்கள். ஆனால், இந்தவருடத்தில் படுகொலையுண்ட சிவிலியன்களில் 70.7 வீதத்தினர் தமிழர். 9.1 வீதத்தினர் சிங்களவர். 5.9 வீதத்தினர் முஸ்லிம்கள்.

படுகொலை செய்யப்பட்டோர்பற்றியபதிவுகளின்படி கொலைக்களமாக இருப்பது யாழ். மாவட்டம். இந்தக் காலப்பகுதியில் கொல்லப்பட்ட பொதுமக்களில் 23.2 வீதத்தினர் யாழ்ப்பாணத்திலேயே உயிரிழந்திருக்கின்றனர். அடுத்து வருவது மட்டக்களப்பு மாவட்டம். இவ்வருடம் இடம்பெற்ற கொலைகளில் 21.5 வீதம் அங்குதான் இடம்பெற்றுள்ளன. அடுத்து 21.3 வீதக் கொலைகளுக்கான களமாக வவுனியா மாவட்டம் அமைந்துள்ளது.

மற்றையது ஆட்கடத்தல் விவகாரம். உச்ச ஆட்கடத்தல்கள் இடம்பெற்ற இடமாகவும் யாழ். மாவட்டமே அமைந்திருக்கிறது. நாட்டில் இந்த வருடம் இடம்பெற்ற ஆட்கடத்தலில் சரி அரைவாசி அளவு எண்ணிக்கை - 49.5 வீதம் - குடாநாட்டில்தான் அரங்கேறியிருக்கின்றது.

கடத்தப்பட்ட அனைவரின் இன, மத விடயங்கள் முற்று முழுதாக உறுதிப்படுத்தப்படாத நிலையில், நாடு முழுவதிலும் இவ்வாறு காணாமற்போனோரில் 64.6 வீதத்தினர் தமிழர்கள் என்பதும், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் தலா மூன்று வீதத்தினர் என்பதும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அதாவது காணாமற்போன 396 பேரில் 256 பேர் தமிழர்கள், 12 பேர் சிங்களவர், 12 பேர் முஸ்லிம்கள். எஞ்சிய 116 பேர் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்பது இன்னும் வகுக்கப்படவில்லை. ஆனாலும், அவர்களிலும் பெரும்பாலானோர் தமிழர்கள் என்றே கருதப்படுகின்றது.

இன ரீதியாக மாத்திரமல்லாமல், இத்தகைய வன்முறைகள் இழைக்கப்படும் பிரதேசங்கள் ரீதியாகவும் நோக்கினால், அவை தமிழர்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கிலும் மற்றும் தலைநகர் கொழும்பிலும்தான் அதிகளவில் இடம்பெறுகின்றன என்பதும் துலாம்பரமாகத் தெரியும்.

ஆக, இது தமிழினத்திற்கு எதிராக இலங்கைத் தீவில் புரியப்படும் பெருங் கொடூரத்தை அப்படியே அம்பலப்படுத்திப் படம்பிடித்துக் காட்டுகின்ற புள்ளிவிவரமாக அமைந்திருப்பது தெளிவு.

இதேசமயம், காணாமற்போனோர் தொடர்பான சர்வதேச தினத்தையொட்டி ஹொங்கொங்கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஆசிய மனித உரிமைகள் மையம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மற்றைய ஓர் அம்சமும் கூடக் கவனிக்கத்தக்கது.

அது - வல்வந்தமான ஆட்கடத்தல்களுக்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அரசுகள் அனுசரணை வழங்கும் ஆசிய நாடுகளில் இலங்கை முதலிடம் வகிக்கின்றது என்பதுதான்.

இந்த இரண்டு அறிக்கைகளையும் - அல்லது புள்ளி விவரங்களையும் - ஒன்றுசேர்த்துப் பார்க்கும்போது ஒரு விடயம் தெளிவாகும்.

* இலங்கையில் படுகொலைகள், காணாமற்போகச் செய்தல் போன்ற அராஜகங்கள் பெருமளவில் தமிழர்களுக்கு எதிராகவே இழைக்கப்படுகின்றன.

* இத்தகை அராஜகங்களின் பின்னணியில் நின்று அரசு அனுசரணை வழங்கும் விவகாரத்தில் ஆசிய நாடுகளில் இலங்கையே முன்னணியில் நிற்கின்றது.

இந்த இரண்டையும் சேர்த்துக் கணிப்பவர்கள் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அரச அடக்குமுறையும், இன ஒடுக்கல் - ஒதுக்கல் நடவடிக்கையும், இனச் சுத்திகரிப்பும், நெருக்குவாரமும், அட்டூழியமும் எவ்வளவு தூரத்திற்குக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன என்பதைச் சுலபமாகப் புரிந்துகொள்வர்.

இத்தகைய கொடூரங்களைத் தடுத்து நிறுத்துவதற்கோ, குற்றமிழைப்போரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கோ, நடவடிக்கை எடுப்பதில் அரசு அக்கறை காட்டுவதில்லை. மறுபுறத்தில் இத்தகைய குற்றமிழைப்போரை சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களித்து விடுவிக்கும் வகையிலான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, இத்தகைய செயற்பாடுகளை அரசு ஊக்கப்படுத்துகின்றது. இத்தகைய அத்துமீறல்களுக்கு இனவாத அரசுத் தலைமையே மறைமுகமாகவோ நேரடியாகவோ ஆக்கமும் ஊக்கமும் வழங்குகின்றது.

எனவே, இதுபோன்ற கொடூரங்களில் ஈடுபடுவோர் தாம் சட்டத்தின்முன் நிறுத்தப்படமாட்டார்கள், தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதை அறிந்து, அந்த நம்பிக்கையில் அவர்களின் அட்டூ ழியம் தொடரத்தக்க விதத்தில் அரசு செயற்படுகின்றது என்றெல்லாம் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இவையெல்லாவற்றையும் சட்ட ரீதியான - ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட - தார்மீக உரிமை கொண்ட - ஓர் அரசாகத் தன்னைக் காட்டிக்கொண்டே ஒப்பேற்றுகின்றது இலங்கை அரசு.

ஆகவேதான், இவ்விவகாரத்தில் சர்வதேச சமூகமும் ஐ.நா. அமைப்புகளும் நேரடியாகத் தலையிடவேண்டிய கடப்பாடு - பொறுப்பு - உள்ளது எனச் சுட்டிக்காட்டுகிறது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

அவசரமாகவும், விரைந்தும் உலக நாடுகள் கவனித்து அணுகவேண்டிய பெரும் மனிதாபிமானப் பிரச்சினை இது.

# இளம் தமிழ்க் குடும்பப் பெண் ஆலங்கேணியில் கடத்தப்பட்டார்

கொழும்பு, ஓக.31

கிண்ணியா, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளம் குடும்பப் பெண் ஒருவர் வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த பன்னீர்ச் செல்வம் விபுலா (வயது-35) என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுப்பிட்டிப் பகுதியிலும் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் குடும்பஸ்தர் ஒருவர் காணாமற்போயிருக்கிறார் என அவரது மனைவி குச்சவெளிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேபகுதியைச் சேர்ந்த சிவணாண்டி வித்தியானந்தன் என்பவரே காணாமல் போயிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர் நேற்று முன்தினம் அதிகாலை தொழிலின் நிமித்தம் வெளியே சென்றவர் என்றும் பின்னர் இதுவரை அவர் வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# நயினாதீவு படகுச் சேவை காலை 6.30 மணிக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 31

குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கான படகுச் சேவை நாளை தொடக்கம் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரையும் காலை 7.30 மணிக்கே முதலாவது சேவை இடம்பெற்றுவந்தது. (1)

# நவ்றூ தீவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளில் 6 பேர் மீது பாலியல் பலாத்காரக் குற்றச்சாட்டு

கடந்த பெப்ரவரியில் படகில் சென்று ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோர முயன்ற நிலையில், அருகில் உள்ள நவ்றூ தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 82 ஈழத்தமிழ் அகதிகளில் அறுவருக்கு எதிராக, இருபது வயது நவ்றூப் பெண் ஒருவரைப் பாலியல் பலாத்காரம் செய்தனர் என்றும் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டனர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்த 82 ஈழத் தமிழ் அகதிகளும் இதேபோல வேறு ஏழு பர்மிய அகதிகளும் படகுகளில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற சமயம் கைது செய்யப்பட்டு நவ்றூ தீவில் குடியேற்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பராமரிப்பது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு நவ்றூ தீவு நிர்வாகிகளுடன் உடன்பாடு கண்டுள்ளது. இந்தத் தடுப்புக் காவல் அகதிகளின் நலனை குடியேற்றத்துக்கான சர்வதேச நிறுவனம் கவனித்து வருகின்றது.

வழமையாக இந்த அகதிகள் தினசரி காலை 8 மணிக்கு பின்னர் தங்களது தடுப்பு முகாமிலிருந்து வெளியேறி இரவு 7 மணிவரை தீவுவாசிகளின்குடியேற்றப் பிரதேசத்தில் கலந்து பழக அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

இந்த நிலையிலேயே மேற்படி குற்றச்சாட்டின் பேரில் ஆறு அகதிகள் நவ்றூ தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவல் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஸ்திரேலிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த அறுவரும் நவ்றூ நீதிமன்றம் ஒன்றின் முன் ஆஜர் செய்யப்பட்டு செப்டெம்பர் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

மேற்படி அகதிகளுக்கு ஆஸ்திரேலியாவில் தஞ்சம் அளிப்பதா என்ற விவகாரத்தில் பெரும் பின்னடைவை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருப்பதாக ஆஸ்திரேலிய வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# எச்.எஸ்.பி.ஸி. வங்கி முன்பாக ஐ.தே.க. நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.31

எச்.எஸ்.பி.ஸி. வங்கி இலங்கை அரசிற்கு முறையற்ற விதத்தில் பெருந்தொகையான வர்த்தகக் கடனை வழங்கக் கூடாது என்று கோரி ஐக்கிய தேசியக் கட்சி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள எச்.எஸ்.பி.ஸி. வங்கியின் தலைமைக் காரியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டு அரசிற்கு எதிராகவும் எச்.எஸ்.பி.ஸி. வங்கிக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச்செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பாகக் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு:-

எச்.எஸ்.பி.ஸி. வங்கியிலிருந்து அரசிற்குக் கடன் வேண்டுமென்றால் மக்களுக்கான நிவாரணத்தை வெட்டி விட வேண்டும் என்றும் பொருள்களின் விலைகள் குறைக்கப்படக் கூடாது என்றும் எச்.எஸ்.பி.ஸி. வங்கி அரசிற்கு நிபந்தனை விதித்துள்ளது.

இவ்வங்கி விதித்துள்ள நிபந்தனைகள் அனைத்திற்கும் அரசு உடன்பட்டுள்ளது. அந்நிபந்தனைகள் அனைத்தும் இந்நாட்டு மக்களுக்கு விரோதமானவை. அது மாத்திரமின்றி அரசு பெறும் இந்தக் கடனை மக்கள்தான் அடைக்கப்போகிறார்கள்.

அபிவிருத்திப் பணிக்காக அன்றி தமது அமைச்சர்களின் செலவுகளுக்காகவே இந்தக் கடன் மூலமான நிதி பயன்படுத்தப்படவுள்ளது. அமைச்சர்களின் சொகுசு வாழ்க்கைக்காக மக்களை அடகு வைக்க நாம் தயாரில்லை. இக்கடன் திட்டத்தை இவ்வங்கி உடனடியாக நிறுத்தவேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும் - என்றார். (சி)

# கற்பிட்டிப் பகுதியில் ஜெலிக்நைட் மீட்பு

கொழும்பு, ஓக. 30

கற்பிட்டிப் பிரதேசத்திலிருந்து மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்ட 183 ஜெலிக்நைட் குச்சிகளை கற்பிட்டிப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கற்பிட்டி சீமா சோலை வீதிச் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸார் நடத்திய சோதனையின்போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

மீன் ஏற்றிவந்த லொறி ஒன்றுக்குள் இவை மறைத்து வைத்து எடுத்துவரப்பட்டன எனக் கூறப்படுகிறது.

இதன்போது இருவர் கைதுசெய்யப்பட்டனர் எனவும், அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்படுகிறது எனவும் கற்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்ஷமன் லங்கவராய்ச்சி தெரிவித்தார். (சி)

## பலாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளை திடீரென இயந்திரத்தில் புகை வெளி வந்ததாகக் கூறப்பட்டது.

விமானிகள் சாதுரியமாக விமானத்தை தரை இறக்கியதால் அனர்த்தம் தவிர்க்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட விமானத்துக்குரிய 'ஏரோ லங்கா' விமானசேவை நிறுவன அதிகாரியிடம் மீண்டும் சேவை எப்போது என்று கேட்டபோது-

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்றைய பிற்பகல் சேவை இடம் பெறவில்லை. இரத்மலானை - பலாலி விமான சேவை எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்பது குறித்து இன்றைக்கே தெரியவரும் - என்று தெரிவித்தார். (அ-1)

## மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறித்த பிஸ்ரல் குழு இருவரையும் சுட்டு விட்டுத்தப்பிவிட்டது என்றும் - பொலி ஸார் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று பாதுகாப்புப்படையினரும் ஈ.பி.டியினரும் அறிவித்துள்ளனர். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 15 | சனிக்கிழமை 01.09.2007 |
| திதி : சதுர்த்தி | மு.ப. 08.41 |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| [illegible] | [illegible] |
| [illegible] | 03.05 - 04.35 |
| ராகுகாலம் | : 09.05 - 10.35 |

## 2ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் திட்டப்பணிப்பாளர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

அதேவேளை-

சீனிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்தார். (அ-1)

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் மேற்கொண்டனர் என்றும் இதில் 7 விடுதலைப் புலி உறுப்பினர் உயிரிழந்துள்ளனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 9 நிலக்கண்ணி வெடிகளை அவர்கள் மீட்டுள்ளனர் என்றும் படைத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மன்னார், தள்ளாடி மற்றும் மாந்தை ஆகிய பகுதிகளிலுள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## நாட்டைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி. நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஜே.வி.பி. நேற்று கொழும்பில் நடத்தியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ அங்கு கூறியவை வருமாறு:-

புலிகள் முற்றாக அழியும் இறுதிக் கட்டத்தில் இப்போது உள்ளனர். இந்த நிலை யில் நாட்டை எப்படியாவது பிரித்து விட வேண் டும் என்ற திட்டத்துடன் பிரிட்டன் செயற் பட்டு வருகின்றது.

'இலங்கையில் சமாதானத்தைக் கட்டி யெழுப்புவதற்கான தந்திரோபாயம்' என்ற தலைப்பில் இலங்கையில் வேலைத்திட்டம் ஒன்றைப் பிரிட்டன் மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளது.

புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் உள்நோக்கத்துடனேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதை இலங்கை அரசு கண்டும் காணாததும் போல் உள்ளது.

பிரிட்டனின் இந்தச் சதி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த அரசு தவறினால், மக்களை ஒன்றுதிரட்டி அவர்களின் பாரிய போராட்டத்தின் ஊடாக நாம் அச்சதித் திட்டத்தைத் தடுத்து நிறுத்துவோம் - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலேஷிய சுதந்திரதின வைபவத்தில் இலங்கை அரசின் பிரதிநிதியாக கலந்து கொள்வதற்காக அங்குசென்றுள்ள அமைச்சர் போகொல்லாகம கோலாலம்பூரில் ரொய்ட்டருக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றின் போதே இப்படிக் கூறியுள்ளார்.

''வடக்கில் தாக்குதல் நடத்தும் எண்ணம் அரசுக்கு கிடையாது. புலிகள் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு'' - என்றார் அவர்.

அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனையை முன்வைப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு, சில வாரங்களில் தனது யோசனைத் திட்டத்துடன் வந்துவிடும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார் போகொல்லாகம.

இதேசமயம், மனிதநேய விவகாரங்களுக் கான ஐ.நாவின் பிரதிச் செயலாளர் நாயகத்தை, இலங்கை அரசின் மூத்த அமைச்சர் களுள் ஒருவரும், அரசின் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, 'பயங்கரவாதி' எனச் சித்திரித்தமைக்கு, மன்னிப்புக் கோர போகொல்லாகம மறுத்து விட்டார் என்றும் ரொயிட்டர்ஸ் தெரிவித்தது.

அக்கருத்து அரசின் (அமைச்சர் ஜெயராஜின்) தனிப்பட்ட நிலைப்பாடு. அது அரசின் கருத்து அல்ல. எனவே, அதற்காக மன்னிப்புக் கோரவோ, வருத்தம் தெரிவிக்கவோ வேண்டிய நிலை எழவில்லை என்றார் போகொல்லாகம. (சி)

## குறைந்த அளவிலான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தில் மிகவும் உறுதியாக இருக்கிறார்''

-இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வரு மாறு:-

1956ஆம் ஆண்டில் இருந்த நிலை தற்போது இல்லை. யுத்தம் செய்து நாட்டில் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தினாலும், இறுதியில் அரசியல் தீர்வொன்றை நிலை நாட்டுவதற்கு அனைத்துக் கட்சிகளும் தீர்மானிக்கவேண்டும். இவ்வாறான நிலை ஒன்றுக்கு நாம் செல்ல முடியா விட்டால் நாடு பாரிய பின்னடைவை எதிர்நோக்கும் - என்று கூறினார். (சி)

விரைவில் பேச, எழுத, வாசிக்க...
A/L தோற்றியோருக்கான....
2ஆம் மொழி O/L இற்கான.....
சிங்களம்
M.சொலமன் சனி,ஞாயிறு -2 p.m.
A/L 2007 நுரிதமீட்டல் ஆரம்பம்: 01.09.2007
அறிவொளி Nallur.

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் - இணுவில்
(இரு இடத்திலும்)
தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு
ஆசிரியர்:
திரு. க. கலாமோகன்
(B.A. Dip. in Teach)
வகுப்பு நாள்கள்
யாழ். நகரில்:
சனி, ஞாயிறு - 2 - 4 p.m.
செவ்வாய் - 4 - 5.30 p.m.
இணுவிலில்:
சனி, ஞாயிறு - 7 - 8.30 a.m.
வியாழன் - 4 - 5.30 p.m.
ஆரம்பம் இரு இடத்திலும் 02.09.2007 ஞாயிறு அனுமதிகளை 01.09.2007 சனி அன்று பெற்றுக்கொள்ளவும்.
★ மாணவர்களுக்கு கூடிய கவனம் எடுக்கவுள்ளதால், ஒவ்வொரு வகுப்பிற்கும் 35 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
★ 30 இற்கு மேற்பட்ட பயிற்சி பரீட்சைகள்.
★ கையேடுகள், பாடத்தொகுப்பு, வினாபயிற்சிப் புத்தகங்கள்.
★ கடந்த கால வினாப் பயிற்சிகள், மாதிரிப் பயிற்சிகள் யாவும் செய்து முடிக்கப்படும். (64381)

NEW PHYSICS CENTRE
யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக
2008 A/L
வெப்ப பௌதிகவியல்
Sat., Sun.
6.15 - 7.30
ஆரம்பம்
01.09.2007
Mr. K.S. SASIKARAN
B.Sc. (Edu.)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ். நகர்
புதிய பிரிவு
SPOKEN ENGLISH
With Grammer
பிரபல ஆசிரியர்
By. ஞானாகரன்
ஆரம்பம்: 01.09.2007 Sat. 4 p.m.
(அனுமதிக்கு முந்துங்கள்).

கணக்கீடு
A/L 2008 கம்பனி
ஆரம்பம் நாளை 4 p.m.
A/L 2009
தொங்கல் கணக்கு
ஆரம்பம் இன்று 5 p.m.
S. தவா
B.Com. (Hons) (Acc.spl)
New Universal
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
19ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் - 2007
காலம் : 02.09.2007 ஞாயிறு முற்பகல் 9 மணி
இடம் : கல்வி நிலைய பிரதான மண்டபம்
பிரதம விருந்தினர் : பேராசிரியர் என். சண்முகலிங்கன் Ph.D.
(தலைவர், சமூகவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள் : மு. முரளிதரன் B.A. Dip. Ed., M.Ed.
(அதிபர், யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்)
தலைமையுரை : T.S. ஞானளன்
(நிர்வாக இயக்குனர், நாவலர் இன்ஸ்ரிரியூட், யாழ்ப்பாணம்)
பரிசு வழங்கல் : திருமதி கௌரி சண்முகலிங்கன் (B.Com, M.Phill)
இறுதி நிகழ்வாக மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெறும்.
பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
விளம்பர அனுசரணை:
50 சாஜுகா நகைமாடம்,
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஐ.நா..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் பரவி உள்ளது.

✱ யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த மாதத்தில் - ஒகஸ்டில் - மட்டும் 2' பேர் காணாமற் போயுள்ளனர்.

✱ கடந்த சில வருடங்களில் வல்வந்தமாகக் கடத்தப்பட்டுக் காணாமற்போன 5,700 இற்கும் மேற்பட்டோரின் நிலைகள் குறித்த முடிவு குறித்த தகவல் கிடைத்ததாக இல்லை.

✱ அரசியல் அச்சுறுத்தல்கள் இறுதியில் கைவிடப்பட்ட சடலங் களாக மாறுகின்றன. இந்தப் படுபாதகக்குற்றங்களைச் செய்வோரை சட்டத்தின் பிடியில் சிக்கவைக்கும் செயற்பாடு இல்லை.

✱ 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நூற்றுக்கணக்கானோர் காணாமற் போயுள்ளனர். 2006இல் ஆகக்குறைந்தது 1,000 பேர் காணாமற்போயினர்.

✱ நீதிக்கும் புறம்பான கொலைகள், கடத்தல்கள், வல்வந்தமாகக் காணாமற் செய்யப்படுதல் இப்போது நாளாந்த நிகழ்வுகள் ஆகிவிட்டன.

✱ மேற்கண்ட வகையான மனித உரிமை மீறல் குறைந்த எண்ணிக்கையே விசாரணைக்கு எடுக்கப்படுகின்றன. (அ)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை ரயில் நிலையம் முன்பாக நண் பகல் 12.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். (1)

A/L 2007, Rebeat Batch
ஆரம்பம்: 01.09.2007
Micro Biology, Genetks
App. Biology.
சர்ம அலகுரிமையை நுரிதமீட்டல்
அல்போன்ஸ்
Sat., Sun. 2.30 p.m.
அறிவொளி
Nallur.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.
புவியியல்
N. பாபு (B.A., Geo. spl)
A/L 2008
Paper Class
[Sat., Sun. 10 -11]
பிரதான விடயங்கள்
★ உருப்படம் நுரித்தல்
★ தூரற் புவியியல் MCQ
★ மானிடப்புவியியல் MCQ
★ பகுதி-II நடந்த கால வினாக்கள்
ஆரம்பம்:01.09.07
Sat.-10 a.m.

பொருளியல்
திரு. சுபாகரன்
பகுதி-II
பணம், வங்கி,
பொது விலை மட்டம்
ஆரம்பம்:
01.09.07 சனி 1p.m.
யூனிவேர்சல்
யா /இந்துமகளிர் கல்லூரி அருகில்.

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ். நகர்
புதிய பிரிவு
3மாத காலத்தில்
சரளமாக உரையாட
சிங்களம்
பிரபல ஆசிரியர்
By:
லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:
01. 09.2007
Sat. 4.30 p.m.

ஆறுமாதகாலத்தில் சரளமாக
உரையாட, எழுத, வாசிக்க, பேச
விரைவான பயிற்சி வகுப்புகள்
SPOKEN ENGLISH
With Grammar
Lecturer:
By: Nishanthan (Dip.in Eng.)
புதிய வகுப்புகள்
ஆரம்பம்: 01.09.2007 சனி
பின்வரும் மூன்று இடங்களில்
பொருளியற்கல்லூரி
★யாழ். நகரில் -12.00 p.m.
★இணுவிலில் -10.00 a.m.
★BARATHY - சித்தன்கேணியில் 3 p.m.
விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
Note: பிரிவுI, பிரிவுII, பிரிவுIII இவற்றுக்கு அனுமதிகள் மூன்று இடத்திலும் நிறுத்தப்பட்டுள்ளன.

BARATHY சித்தன்கேணி
தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு
திரு. த. தயானந்தன்
(B.A. Dip. in Teach)
திரு. க. கலாமோகன்
(B.A., Dip. in Teach)
ஆரம்பம் : 02.09.2007 ஞாயிறு - 10.30
வகுப்பு நாள்கள் சனி. ஞாயிறு. 10.30 - 12.00
புதன் - 4 - 5
கவனத்திற்கு:
*30ற்கு மேற்பட்ட பயிற்சிப் பரீட்சைகள்
* கையேடுகள், பாடத் தொகுப்பு வினா பயிற்சி புத்தகங்கள்
* கடந்த கால வினாப் பயிற்சிகளும் மாதிரி வினாப் பயிற்சி யாவும் செய்யப்படும்.
அனுமதிகள் 01.09.2007அன்று பெற்றுக்கொள்ளவும்.

புதிய பிரிவு
SPOKEN ENGLISH
With Grammar
By: Mr. BRITTO
ஆரம்பம்: 01.09.2007 சனி 10.30 a.m.
அனுமதிகள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்
(யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே).

## கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிகளாலும் பல்வேறு துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் இன்று கடத்தப்படுகிறார்கள், கொலை செய்யப்படுகிறார்கள். கப்பம் கோரப்படுகின்றது. இவைகள் ஒன்றும் மஹிந்தருக்குத் தெரியாமல் இல்லை.

பல்வேறு துயரங்களை அனுபவிக்கின்றனர். தமிழ் மக்கள் மீது வேண்டுமென்றே. ஒரு யுத்தம் திணிக்கப்பட்டுவருகிறது - என்றார்.

After A/L
IDM
IDM Computer Studies (Pvt) Ltd.
Affiliated University College
216, Navalar Road, Jaffna. T:P-021-222 9901
www.idm.lk – www.idm.org
இலவச கணனிக் கருத்தரங்கு
A/L மாணவர்களுக்கான விசேட இலவச கணனி கருத்தரங்கு 01-09-2007 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.
அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்
OPEN GATEWAY FOR
HIGHER EDUCATION IN - UK
உங்கள் உயர்படிப்பினை
UK சென்று தொடர்வதற்கு திறந்த நுழைவாயில்
IDM

## மரண அறிவித்தல்கள்



### அருட்திரு. B.F. பொணிபஸ்

அருட்திரு. B.F.பொணிபஸ் அடிகளார் 27.08.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்கச் சடங்குகள் நாளை (01.09.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

நாளை (01.09.2007) முற்பகல் 9 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
செயலர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
(சி-53521)

### திருமதி கந்தையா பசுபதி

கரவெட்டிக்கிழக்கு, கிழவிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா (இரத்தினம்) பசுபதி நேற்று (30.08.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - பசுபதியின் மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும் யோகநாதன், செல்வமலர், யோகமலர், வைத்தியநாதன், புஷ்பமலர் ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2007) வெள்ளிக்கிழமை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
க. வைத்தியநாதன் (மகன்).



### செல்வி குகதாசன் துஷாரா

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் 66/2, 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குகதாசன் துஷாரா 28.08.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் குகதாசன் - ரதீஸ்குமாரி தம்பதியரின் ஏக புதல்வியும் நல்லதம்பி - சின்னத்தங்கச்சி, ரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மீசாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
ந. குகதாசன் (தந்தை).

### கண்ணதாசன் ரஜந்தன்

இணுவில் தெற்கு,மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கண்ணதாசன் ரஜந்தன் நேற்று (30.08.2007) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கண்ணதாசன் - ராதா தம்பதியரின் புதல்வனும் ரஜிதா, ரஜீவன், ரவிதா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில் தெற்கு.
(சி-53522)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2007 இல் அச் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org